

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 25.07.2024 | 30. ஆட்டுக்குட்டியின் ஜீவியமில்லாமல், அதன் தோலை போர்த்துவது தவறு! |
|---|---|



மத்தேயு 7:15-19, “ஆட்டுத்தோலை போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருகிற கள்ளத்தீர்க்க தரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள்...” என இயேசு எச்சரித்தார்! போர்த்துக்கொள்ளுதல் என்பது ‘வெளியே’ அணிந்து கொள்ளுதல் ஆகும்! அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும், அவருடைய வார்த்தைகளையும், கிருபை, விசுவாசம், இயேசுவின் இரத்தத்தினால் ஒப்புரவாகுதல் போன்ற வார்த்தைகளையும் வெளியே அணிந்துகொள்கிறார்கள்!

ஏனெனில், இவைகளே பக்திக்குரிய தோற்றத்தை காண்பிக்கிறது! ஆனால், அவர்களோ, இன்னமும் தங்களின் அந்தரங்க வாழ்வில் பாவத்தைவிட்டு இன்னமும் விலகாதவர்கள்! தேவசித்தத்திற்கு மாறாக தனக்கானவைகளை தேடுகிறவர்கள், அவர்கள் தேவனுடைய கற்பனைகளை மீறி அதை அவமாக்குகிறவர்கள்! கேட்டால், தேவனுடைய கற்பனையை நீங்கள் கைக்கொள்வதை மாத்திரம் பாருங்கள்! என துணிகரமாய் மழுப்புகிறவர்கள்! மேலும், தேவ ஆவியின் பெலத்தை பெறுவதும் போதுமானதல்ல! எனக் கூறி... இயேசு கிறிஸ்து நமக்காக, நாம் கடைப்பிடிக்கவேண்டிய எல்லா கற்பனைகளையும் கைக்கொண்டுவிட்டபடியால், நாம் கடைப்பிடிப்பது முற்றிலும் அவசியமில்லாதது என்றும் சொல்கிறார்கள்! அவர்கள் கெட்ட கனிகளை கொடுக்கிறார்கள். அதேநேரத்தில்... பாவமன்னிப்பில் தங்களை தாங்களே ஆறுதல்படுத்திக்கொள்கிறார்கள்! பாவத்திலேயே தொடர்ந்து ஜீவிக்கும்படியாக தேவனுடைய கிருபையை தங்களுக்கென சாதகப்படுத்துகிறார்கள்!

– ரத்னம்